
# 4 நிழல் கதை (டோகாலு)




நகுலும் அவனது நண்பர்களும் ஒரு கிராமத்து கண்காட்சியில் தோகலு கோம்பேயாடா என்ற நிழல் நாடகத்தைப் பார்த்தனர். அவர்கள் அனைவரும் நிழல்களைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

அவர்களும் நிழல்களை உருவாக்க விரும்பினர். ஆகையால், அவர்கள் தங்களுடைய கைகளைப் பயன்படுத்தி பல்வேறு விலங்குகளின் நிழலைச் சுவரில் மீது உருவாக்கினர். நீங்கள் கூட நிழல்களை உருவாக்க முயற்சி செய்யலாம்.



குழந்தைகளிடம் தோகலு கோம்பேயாடா பற்றிய செய்திகளைப் பகிருங்கள். இது ஒரு பொம்மலாட்ட கலை. இந்தக் கலை கர்நாடகப் பகுதியில் காணப்படுகிறது. பொம்மைகளைப் பயன்படுத்தி இந்தியப் புராண நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டுகின்றனர். குழந்தைகளைத் தங்களுடைய பொம்மலாட்டம் பார்த்த அனுபவத்தைப் பகிரவிடுங்கள்.



© NCERT not to be republished



## நாம் செய்வோம்

வெவ்வேறு விலங்குகளின் நிழல்களை உருவாக்கி அவற்றின் ஒலிகளை உருவாக்குவதன் மூலம் ஒரு பங்கேற்பு நாடகத்தை நிகழ்த்துங்கள்.




## நாம் பேசுவோம்

அ. நீங்கள் உங்களுடைய நிழலையோ அல்லது மரம், நாய், பசு மற்றும் வேறு ஏதாவது விலங்கின் நிழலையாவது பார்த்திருக்கிறீர்களா?

ஆ. நாம் நிழலை எப்போது பார்க்கிறோம்?

இ. எப்போது நிழல் மறைந்து போகும்?

## நிழலோடு விளையாட்டு



© NCERT not to be republished

இப்போது உங்களைச் சுற்றியிருக்கும் பொருள் மீது டார்ச் லைட்டை அடியுங்கள். அந்த வெளிச்சத்தில் அந்தப் பொருட்களின் நிழல்களைக் கவனியுங்கள்.

அ. டார்ச்சின் நிலையை மாற்றும்போது நிழல்களின் அளவு மாறுமா?

ஆ. நாளின் எந்த நேரத்தில் உங்கள் நிழல் நீளமாக இருக்கும்?

இ. நாளின் எந்த நேரத்தில் உங்கள் நிழல் குட்டையாக இருக்கும்?


நாளின் வெவ்வேறு நேரங்களில் குழந்தைகளின் நிழல்கள் பற்றிய அவதானிப்புகள் மற்றும் அதற்குப் பின்னால் உள்ள காரணங்கள் பற்றிக் குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள்.





## நாம் கண்டுபிடிப்போம்.

அ. உங்களைச் சுற்றியிருக்கும் பொருட்களின் வடிவத்தைக் கண்டுபிடியுங்கள். சான்றாக, அழிப்பான், இலை, தீ பெட்டி, வண்ணப் பென்சில், கூர்மையாக்கி போன்றவை.



ஆ. கண்டுபிடித்த வடிவங்களை வரைக.

© NCERT not to be republished



## நாம் சிந்திப்போம்.

ஒன்று போல கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களின் பெயர்களை எழுதுக.

அ. பாட்டில் மூடி

ஆ. அழிப்பான்



# கண்ணாமூச்சி

வட்டமும் ◯ செவ்வகமும் ▭ ஒளிந்து விளையாடுகின்றன. செவ்வகம் வட்டத்திலிருந்து மறைகிறது










© NCERT not to be republished




© NCERT not to be republished

**இப்போது அவர்கள் அனைவரும் சேர்ந்து விளையாடினர்.**

அ. வட்டம் ◯ கடிகாரத்திலும் பந்திலும் மறைக்க முடியும். ________, ________.


ஆ. செவ்வகம் ▭ காலணி பெட்டியிலும் புகைப்படச் சட்டகத்திலும் மறைந்துகொள்ள முடியும்

இ. ஆனால், முக்கோணமும் △ சதுரமும் □ எங்கு மறையவேண்டும் என்று தெரியாமல் குழம்பிவிட்டன. அவை எங்கு மறையமுடியும் என்று சில பரிந்துரையைக் கொடுங்கள்.

1, முக்கோணம் △ ________, ________ மறைய முடியும்.

2. சதுரம் □ ________, ________ மறைய முடியும்.

கம்பளத்திற்கு வண்ணமிடுங்கள்



முக்கோணங்களுக்குச் வண்ணமிடுங்கள். சிவப்பு



வட்டங்களுக்குப் வண்ணமிடுங்கள். பச்சை



செவ்வகத்திற்கு வண்ணமிடுங்கள். மஞ்சள்



நீல சதுரத்தை வண்ணம் தீட்டு



வெவ்வேறு வடிவங்களில் நீங்களே பொருட்களை உருவாக்கி அவற்றுக்கு வண்ணமிடுங்கள்.



© NCERT not to be republished

## மூலையைப் பிடி!

நவீனும் அவனது நண்பர்களும் விளையாடுகின்றனர். நவீன் சுவரை நோக்கி நின்று கைதட்டுகிறான். அவன் கைதட்டிகொண்டிருக்கும் பொழுது அவனது நண்பர்கள் மேசையின் அருகே ஓடுகிறார்கள். அவன் கைதட்டுவதை நிறுத்தியதும், எல்லோரும் மேசையின் மூலையில் நிற்கிறார்கள். மூலையில் நிற்காத குழந்தை வெளியே இருக்கும். அப்போது குழந்தை கைதட்டும், ஆட்டம் மீண்டும் தொடரும்..




படத்தைப் பார்த்து பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

அ. மேசையின் மூலைக்கு அருகில் நிற்கும் குழந்தைகளுக்குப் பெயரிடு.

ஆ. அடுத்து யார் கை தட்டுவார் என்பதை உங்களால் கூறமுடியுமா?


இ. வாசிம் எங்கு நின்றுகொண்டிருக்கிறான்?

எ. நம்மைச் சுற்றி நேரான விளிம்புகளைக் கொண்ட பொருட்களுக்குப் பெயரிடுக.

ஏ. நம்மைச் சுற்றியுள்ள பல பொருட்கள் வளைந்த விளிம்புகளைக் கொண்டுள்ளன. சில கீழே காட்டப்பட்டுள்ளன. நீங்கள் சுற்றிலும் பார்க்கும் அத்தகைய பொருட்களின் பெயர்களை ஆராய்ந்து பகிரவும்.







© NCERT not to be republished




## நாம் சிந்திப்போம்.

அ. வளைந்த விளிம்புகளைக் கொண்ட பொருட்களுக்கு எத்தனை மூலைகள் உள்ளன?

ஆ. நேரான மற்றும் வளைந்த விளிம்புகளைக் கொண்ட பொருட்களின் பெயரைக் குறிப்பிடவும்?

### ஓரிகாமி விளையாட்டு!



அ. ஒரு காகிதத்தை எடுத்து அதைச் சதுரமாக மடியுங்கள்..

ஆ. இது மூலைகளையும் விளிம்புகளையும் கொண்டுள்ளது

இ. இரண்டு மூலைகளையும் இணைத்து, படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று அதைப் பாதியாக மடியுங்கள்

ஈ. நீங்கள் பெறும் வடிவத்தில் டிக் ✓ செய்யவும்.

உ. இந்த வடிவத்தில் மூலைகள் மற்றும் விளிம்புகள் உள்ளன.

i. ii. iii.

ஊ. ஒரு முக்கோணத்தைப் பெற காகிதத்தை மீண்டும் பாதியாக மடித்து, பின்னர் அதை விரிக்கவும்.

எ. இப்போது முக்கோணத்தின் இரண்டு மூலைகளிலிருந்து இரண்டு முக்கோணங்களை உருவாக்கவும்.

ஏ. இப்போது எத்தனை மூலைகள் உள்ளன?

ஐ. மூன்றாவது மூலையை மேல்நோக்கி மடித்து, படத்தில் காட்டியிருக்கும்படி மூக்கு மற்றும் கண்களைச் செய்யுங்கள்.

உங்கள் காகித நாய் தயாராக உள்ளது!



4 பக்கங்கள் கொண்ட வடிவத்தைப் பெறும் வகையில் சதுரத் தாளை மடிக்க முடியுமா? இப்போது அதற்கு எத்தனை மூலைகள் உள்ளன?

© NCERT not to be republished

குழந்தைகளைச் சுற்றியுள்ள பல்வேறு பொருட்களை ஆராயச் சொல்லுங்கள் மற்றும் அவற்றின் விளிம்புகள், மூலைகள் மற்றும் பக்கங்களின் எண்ணிக்கையைக் கண்டறியச் சொல்லுங்கள்.





## அமைப்புமுறைகள்

அ. பாட்டில் மூடிகள், அழிப்பான்கள், பென்சில்கள், நாணயங்கள் போன்ற பல்வேறு வடிவங்களைக் கொண்ட பொருட்களை முத்திரையிடுவதன் மூலம் வடிவங்களை உருவாக்கவும்.




ஆ. ராதா அவளுடைய கைகளில் மெகந்தி போட்டிருந்தாள். நீங்கள் உங்கள் கைகளில் எப்படி மெகந்தி வடிவத்தையும் டிசையினையும் போடுவது என்பதைக் கண்டுபிடிக்கலாம்.






© NCERT not to be republished



## நாம் செய்வோம்

நித்யா இலைகளை வைத்து வடிவங்கள் செய்து விளையாடுகிறாள்.




இப்போது நீங்களும் சில இலைகளைச் சேகரித்து வடிவங்களை உருவாக்கலாம். இலைகளின் ஒரு பகுதியில் வண்ணம் பூசிவிட்டு அதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் அச்சிடுக.


© NCERT not to be republished


## திட்டப்பணி.


உங்கள் வீடு அல்லது வகுப்பறையை அலங்கரிக்க உங்களுடைய மூத்தவர்களின் உதவியுடன் வெவ்வேறு வடிவங்களின் சுவரில் தொங்கவிடப்படும் கட்அவுட்களை உருவாக்குங்கள்.


பின்வரும் வடிவங்களை நீட்டிக்கவும்.

அ. 

ஆ 


இ. 


ஈ. 

உ 

ஊ. 

எ. அ ஆ ஆ இ

ஏ. 







© NCERT not to be republished

கிக்கு முயல் 4ஆவது ஓடுமீது தாவியது. அடுத்து அது எங்கே தாவ வேண்டும் என்பதை மறந்துவிட்டது. அடுத்து தாவவேண்டிய ஓடு மீது வட்டமிட்டு அதற்கு உதவி செய்யுங்கள். ◯ .

1, 4, ______, ______, ______, ______, ______, ______




கிக்குவின் அம்மா 6ஆவது ஓடு மீது தாவியது. அடுத்து தாவவேண்டிய டைல்ஸ் மீது × குறியிட்டு அதற்கு உதவி செய்யுங்கள்.

1, 6, 11, _____, _____, _____, _____, _____



## நாம் செய்வோம்

பின்வரும் எண் வடிவத்தை நீட்டிக்கவும்.

A. 5, 10, 15, ☐ ☐ ☐ ☐ ☐

B. 7, 14, 21, ☐ ☐ ☐ ☐ ☐

C. 1, 7, 13, ☐ ☐ ☐ ☐ ☐

© NCERT not to be republished

